# உன் பெயர் குளிக்கும் எழுத்துக்களில்

சம்சுனா



# உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில்


## ஏ.பி.சம்சுனா

Dip.in.Edu.(Tamil) , B.A. (Tamil)

ஆசிரியை

(முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலயம்) சம்மாந்துறை.



வெளியீடு

வாழும் கலை இலக்கிய வட்டம்
சம்மாந்துறை.

‘உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில்’
கவிதைகள்

| | |
|---|---|
| ஆசிரியர் | : ஏ.பி. சம்சுனா. |
| முதற் பதிப்பு | : 2012 ஒக்டோபர் |
| வெளியீடு | : வாழும் கலை இலக்கிய வட்டம். சம்மாந்துறை. |
| கணணித் தட்டச்சு | : ஏ.பி. சம்சுனா. |
| அட்டை,புத்தக அமைப்பு | : நவாஸ் செளபி |
| தொடர்புகளுக்கு | : ஆசிரியை , சது,மு.ம.ம.வி (தே.பா) 9டி,கபூர் வீதி, சம்மாந்துறை. |
| தொ.பேசி | : 0677913151 |
| மின்னஞ்சல் | : banazirhanan@gmail.com |
| அச்சுப் பதிப்பு | : டிசைன் வேள்ட் சாய்ந்தமருது 077 6401296, 071 8217910 |
| பக்கங்கள் | : 84 |
| விலை | : 300/= |

UNPAYERKURIKKUMYELUTHUKKALIL
poems

| | |
|---|---|
| Auther | : A.B.Samsuna. |
| First Edition | : 2012, October |
| Published by | : Vaalum kalai ilakiya vattam. Sammanthurai. |
| Type Seting | : A.B.Samsuna |
| Cover Design & layout | : Nawas Sawfi |
| Contect | : Str .M.M.M.V (N.S ) 9D,Gaffoor lane, sammanthurai. |
| T.Phone | : 0677913151 |
| Email | : banazirhanan@gmail.com |
| Printed | : Design World - Sainthamaruthu 077 6401296, 071 8217910 |
| Pages | : 84 |
| Price | : 300/= |

காதலை நேசிக்கும்
கலையுலகைப் போசிக்கும்
வாசிப்பை யாசிக்கும் என்
நட்பை சுவாசிக்கும்
நேசமுள்ள நண்பர் குழாம்
நீண்ட காலம்
நிலைத்து நிற்க ....

## உங்களை நோக்கி .......

மொழியில் ஊறி
உணர்வில் தேறி வருவதே
கவிதை எனும்
வைர வரியில் விழுந்து
பிறந்த அமுதே எந்தன் கவிதை.

கவிக்கு மொழி கூட
இரண்டாம் பட்சம்தான் இருப்பினும்
அந்த மொழிக்கே
தமிழ் மொழிக்கே
அடிமையான ஆசான் நான்.

இலக்கிய வடிவங்கள்
அத்தனையும் சிறு வயது முதலே
என் சித்தத்தை ஈர்த்தவை
என் ரத்தத்தில் கலந்தவை.

எண்மரில் இளையவள் நான்
அன்பிலே திளைத்தவள்தான்
அறிமுகம் இவ்வளவுதான்
அழைக்கிறேன் மீதமும்
கூறிடத்தான்.

மழையில் காய்ந்து
வெய்யிலில் நனைந்து
முள்ளில் படுத்து
கல்லில் தடுக்கி

காதலில் தோற்ற அனுபவங்கள் - என்
சொல்லில் ,உணர்வில்
உயிரில் வலித்த போது
பிறந்ததுதான் இவை

கனவுகள் நனவுகளிடையே
கைதியாய் போன மனிதப் பயணிகளின்
வாழ்க்கைப் பரிணாமத்தில்
கொஞ்சம் நானும் பருகி
பார்த்த போது
விழுந்த துளிகளே இவை
என்பதை விட கூற ஏதுமில்லை .

விமர்சனமும் வியாக்கியானமும்
தேவைதான் வாழ்க்கைக்கு.
அது இலக்கியத்துக்கல்ல என்பதே
கவிதை பற்றிய என் நிலைப்பாடுமாகும்.
அதனால் .....
என் எழுத்துக்கள்
உங்களுக்கு சொந்தம் - இனி
உங்கள் கைதட்டல்கள்
மாத்தரமே என் வளர்ச்சிக்கு சொந்தம் .

**என்றும் அன்புடன்**
**ஏ.பீ. சம்சுனா.**

## இந்த எழுதுகோலுக்கு என் அணிந்துரை

வாசிப்பு, எழுத்து என்பனவெல்லாம் ஒரு மனிதனுக்கு இருக்கின்ற மிகப் பெரும் விடுதலையும்,சுதந்திரமும் ஆகும்.ஆணாயினும் சரி,பெண்ணாயினும் சரி தன்னுள் அடக்கப்பட்டிருக்கின்ற,தன்னை ஆக்கிரமித்த உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற வடிகாலாக இலக்கியத்தைக் கொள்கினறனர்.இந்த வகையில் மனிதனது முழு மொத்தமான அநுபவங்களையும் வெளிப்படுத்துகின்ற சாதனமாக இலக்கியமும் மாறுகின்றது.

இலக்கிய வெளிப்பாடுகளில் மிகச் சிறப்பான - சிரமமான ஊடகம்தான் கவிதை.பாரதிக்குப் பின் கவிதையின் வாசல் மிக அகலத் திறந்திருக்கின்றது. பிச்சைமூர்த்தி முதலானோர் அதனை இன்னும் எளிமைப்படுத்தியுள்ளனர்.இன்று கவிதைகளை கருத்துக்களே அதிகம் ஆளுகின்றன.அதனை கவித்துவத்துடனாவது சொல்லமுடியுமென்றால் ‘கவிதை’ பற்றிய ஓரளவு நம்பிக்கை பிறக்கும். சம்சுனாவின் கவிதைகள் நம்மை வாசிக்கத் தூண்டுவது மகிழ்ச்சி தருகின்றது.தன் உணர்வுகளை சம்சுனா துணிச்சலுடன் சொல்லுவது இங்கு பாராட்டத்தக்கது.

முஸ்லிம் பெண்கள் இலக்கியச் செயற்பாட்டாளர்களாக இருப்பதில் பல்வேறு சங்கடங்கள் உள்ளன.தங்களை மீறி அவர்கள் வெளிப்படுத்துகின்ற உணர்வுகள் அவர்களை அந்த சங்கடத்துக்குள்ளாக்கி விடுகின்றன.ஆனால், அத்தகைய சங்கடங்கள் ஏதுமின்றி மிகச் சாதாரணமாக தன் உள்ளத்து உணர்வுகளை சம்சுனா இங்கு கவிதையாக் கியுள்ளார்.

பெரும்பாலும் எழுதத் தொடங்குகின்ற கவிஞர்கள் தன் தாயை, தன் ஊரை, உள்ளத்து உணர்வுகளை, அன்பை, ஆதரவை என பலதரப்பட்ட பாதிப்புக்களையே எழுதுவர். அத்தகைய பாணியிலேதான் சம்சுனாவின் கவிதைகளும் அமைந்துள்ளன. ஆனால் அக்கவிதைகள் ஆரம்ப நிலையிலுள்ள கவிதைகளல்ல: உற்சாகத்துடனும், புதிய அநுபவங்களுடனும் எழுந்த கவிதைகளாக எழுந்திருப்பது சம்சுனாவைப் பற்றிய நம்பிக்கையை நமக்குள் ஏற்படுத்துகின்றது.

இத்தொகுதியில் பலவிடங்களில் சம்சுனா அன்பின் ஆழுத்தையும்,பிரிவையும் வெளிப்படுத்துவது கவனிக்கத்தக்கது.

'சிதறிப் போன வரலாறு' என்ற கவிதையில்,
நிலவில் தூளி கட்டும்
கனவில்
சிதறிக் கிடக்கிறது
என் இதயம்
யாரேனும் அதை ஒன்றுபடுத்தித் தாருங்கள். என்பதுவும்

'காதல் உள்ளவரை' என்ற கவிதையில்,

அமாவாசைக்கும்
பௌர்ணமிக்கும்
ஆயிரமாயிரம் அர்த்தங்கள் கற்பிக்கும்
அந்தரங்க உறவே காதல்
.........................
காதல் வந்தாலே
கண்ணாம்பூச்சிதான் வாழ்க்கை
அழுவதும் சிரிப்பதும்
மாறி மாறி நடக்கின்ற
அற்புதமான வித்தை காதல்... என்று கூறுவதும்

‘சுகமான சுவாசம் கொடு’ என்ற கவிதையில்

ஏமாற்றத்தை மறு முறையும்
ஏற்கும் சக்தி
எனக்கு இல்லை
நான் வாழ வேண்டும்
ஒரு முறையேனும்
சுகமான சுவாசம் கொடு.... என்று காற்றிடம் வேண்டுவதும் தொலைந்துபோன ஒன்றுக்காக கவிஞர் ஏங்குவதும் புலப்படு கின்றது.

பெண்ணைப்பற்றி பலரும் எழுதியுள்ளனர்.பெரும்பாலான ஆண் கவிஞர்கள் பெண்ணைப் பார்க்கும் விதமும், பெரும்பாலான பெண் கவிஞர்கள் ஆணைப் பார்க்கும் விதமும் வெவ்வேறானவை. பாரதியாரிலிருந்து பெண்ணை புரட்சிகரமாக பார்க்கும் மரபு உருவாயிற்று. அந்தப் புரட்சிகரமான கருத் துக்கள் சம்சுனாவிலிருந்தும் வருகிறது. மிக அநாயசமாக- மிக வீச்சுடன் கவிஞர் பேசுகிறார்.

பெண்ணே!
பூமியில் குழப்பங்கள் தோன்றினால்
புயலாக மாறு
சிக்கல்கள் துரத்துகையில்
புதுமைப் பெண்ணாக மாறு.

உன் பாதங்களை
இம்மண்ணில் நிலை நிறுத்து!
கைகளை முடிந்தவரை நீட்டு!
ஐம்பூதங்களிலும்
உன் ஆட்சி அவதரிக்கும்.

மேலும் இயற்கையோடு ஒட்டிய மெல்லிய உணர்வுகளையும் மனிதனோடு ஒட்டிய வேதனைகளையும் கவிஞர் கவிதையாக்கியிருப்பது கவனிக்கத்தக்கதாக அமைந்துள்ளது.

'உன் மேல் கொண்ட காதலுக்காக' என்பது உணர்வுகளைப் பிழியும் நல்ல கவிதையாகும். 'உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில்' இன்னும் சிக்கனமாக சிறைப்படுத்த வேண்டிய கவிதை. மொத்தத்தில் சம்சுனா நமக்குள் நம்பிக்கை தருகின்ற கவிஞராகின்றார். கவிதைகள் உள்ளத்தின் உணர்வுகள். அவை கவிஞர்களுக்கும் வாசகர்களுக்கும் ஒத்தடமாக அமை வதுண்டு.

சம்மாந்துறையில் பெண் கவிஞர்கள் வரிசையில், பரிதா இஸ்மாயிலின் ஆர்பரிப்பு ஓய்ந்துவிட்டது. றபிக்கா, நுஹா, தஸ்லிமாவின் சத்தத்தைக் காணவில்லை. மசூறா ஏ மஜீத் இன்னும் எழுதுகிறார். சம்சுனாவும் தொடர்ந்தும் எழுதும் ஆர்வம் பெற வேண்டும் என பிராத்திக்கின்றேன்

**கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ்**
**தலைவர், மொழித்துறை**
**தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

# யதார்த்தத்தை நேசிக்கும் கவிதைகள்

சம்மாந்துறையின் இலக்கிய வரலாற்றினைப் பார்கின்றபோது ஏராளமான பெண் இலக்கியவாதிகள் காணப்பட்டாலும் இவர்களுள் தங்களுடைய படைப்புக்களை நூலாக யாத்து வெளியிட்டவர்கள் ஒருசிலரே. இதனடிப்படையில் ஆசிரியர் சம்சுனாவால் எழுதப்பட்ட "உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில்" எனும் கவிதை நூலினை வெளியிடுவதில் வாழும் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் என்ற வகையில் பெருமிதமடைகின்றேன்.

வாழும் கலை இலக்கிய வட்டம் முதலாவது வெளியிட்ட நூல் எம்.ஐ.எம். சாக்கீர் எழுதிய "சம்மாந்துறை பெயர் வரலாறு" என்ற நூலாகும். எமது அமைப்பு உயிர் பெற்று ஒரு வருடம் நிறைவு பெறுவதற்குள் "உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில்" எனும் கவிதைத் தொகுதியினையும் இரண்டாவதாக வெளியிட்டு உயிரோட்டமான ஒரு அமைப்பாக அது தலைநிமிர்கிறது.

கவிதைகள் காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப பல்வேறு புதுமைகளுடன் வெளிவந்தாலும் அவை மனித மனங்களில் என்றும் பதியக் கூடியதாகவும் சமூக யதார்த்தங்களைப் பிரதி பலிக்க கூடியதாவும் அமைய வேண்டும். அந்த வகையில் இத்தொகுப்பு குறிப்பிட்ட சில காலங்களுக்குள் எம்மவர்களால் வெளியிடப்பட்ட கவிதை தொகுதிகளுள் சிறப்புத்தன்மை உள்ளதாக அமைவதுடன் இவருடைய தமிழறிவு தொடர்பான புலமையும் இதில் பறை சாட்டுகின்றது.

காதல், சமூக யதார்த்தம், நடைமுறை வாழ்வியலில் ஏற்படுகின்ற தோல்வி, துன்பம், ஏமாற்றம், நட்பு, உறவுகள் போன்றவற்றை தெளிவாக இத்தொகுதியில் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். எமது வாழும் கலை இலக்கிய வட்டமானது இவ்வாறான சிறந்த ஆக்கங்களை வெளியிடுவதற்கும் இவ்வாறு முயற்சிப்பவர்களை அடையாளம் கண்டு, இவற்றில் ஏற்படும் சவால்களுக்கு உறுதுணையாக நிற்பதற்கும் தயாராகவுள்ளது. இன்று எம்முடைய

நிலையை தட்டிக்கொடுப்பதற்கும் யாருமில்லை அவற்றை தாண்டிவந்தால் விட்டுக் கொடுப்பதற்கும் யாருமில்லை இவற்றையும் தாண்டி ஆசிரியை சம்சுனா இந்நிலையை அடைந்திருப்பது உண்மையில் சாதனைதான். எமது ஊரில் இலக்கியவாதிகளாக மிளிர்பவர்கள் குறிப்பிட்ட சிலகாலங்களில் காணமற் போவதும் கவலையானதொரு விடயமே இதனை நிவர்த்திப்பதற்கும் இவ்வாறானவர்களின் படைப்புகளை வெளிக் கொண்டுவருவதற்கும் எமது வாழும் கலை இலக்கியவட்டம் இன்ஷா அல்லாஹ் பக்க பலமாக அமையும்.

இக்கவிதைத் தொகுப்பில் **பயணம், அரச ஊழியன்** ..... போன்ற கவிதைகள் கூறும் விடயங்கள் பல்வேறுபட்ட மனிதர்களுடைய அனுபவத்தில் இருந்தாலும் அவை வெளிப்படுத்தப்படுவதில்லை ஆனால் அவை சிறப்பாக வெளிக் கொணரப்பட்டிருப்பது இக் கவிதைத் தொகுதிக்குச் சிறப்பூட்டுகின்றது என்பதுடன் ஆசிரியையுடைய திறமையையும் நிலைநிறுத்துகின்றது. எனது பார்வையில் ஆசிரியர் என்பவர் அறிவாளியாக இருப்பதற்கு அப்பால் செயற்பாட்டாளராகவும், படைப்பாளியாகவும் (Practical Person) இருக்கின்ற போது மாணவர்கள்கூட சிறந்த ஆக்கவா திகளாக வரமுடியும் அவ்வாறனவர்களை உருவாக்குவது இன்று எமக்குள் இருக்கும் பொறுப்பாகும் இதனை ஆசிரியை .சம்சுனா போன்ற வர்களால் மாத்திரம்தான் முடியும் என்ற பொறுப்பையும் அசிரியர் தயக்கமில்லமல் ஏற்க வேண்டும் என்று வேண்டியவானாக. இந்நூலை வெளியீட்டுவைக்கும் பொறுப்பை எமது வாழும் கலை இலக்கிய வட்டத்திற்கு வழங்கிய சம்சுனா ஆசிரியைக்கு நன்றிகளைத் தெரிவிப்பதுடன். மேலும் இவருடைய ஆக்கங்கள் வெளிவர வேண்டியும் இவருடைய சமூகப்பணிகள் மேலும் எம் சமூத்திற்கு கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டுடனும்....

**மன்சூர் எம். சமீர்**
**தலைவர்**
**வாழும் கலை இலக்கிய வட்டம்** (Live Art and Literature circle)
**சம்மாந்துறை**

# தொலைநகலில் வந்த தூறல்கள்!

மட்டக்களப்பு தேசிய கல்விக்கல்லூரியில் முதன்மொழிப்பாடத்தைக் கற்று, விடே சித்தி பெற்றவர்தான் இந்த இளம் கவிஞினி ஆதம்பாவா சம்சுனா. தற்போது மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலும் தமிழ் மொழியில் இளங்கலை (பி.ஏ) பட்டத்தையும் முடித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவர் இக்கல்லூரியில் கற்ற காலங்களில் நற்சிந்தனை, பேச்சுக்கள், முன்வைப்புக்கள், விவாதங்கள் என பல இடங்களில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பதித்துக் கொண்டவர். நிமிர்ந்த நடை,நேர்கொண்ட பார்வை, மதப்பற்று, மொழிப்பற்று என எல்லாவற்றிலும் முன்மாதிரியான ஒரு மாணவி யாவார்.

இவரது கவித்துவம் ஏலவே எம் கல்லூரியறியும்.இன்று எம்முன் கண்சிமிட்டுகின்ற 'உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில்' கவிதைத் தொகுப்பு இயற்கையோடு காதல், நட்பு, பெண்கள் என சமுகத்தின் பல்வேறு கோணங்களையும் யதார்த்தபூர்வமாக,எளிய நடையில் பவனிவருவதைக் காணலாம்.'தாய் ஒரு நல்ல ஆசான், ஆசானும் இரண்டாவது தாயே' என்பதற்கிணங்க தன் கற்பித்தல் செயற்பாடு களோடு மாணவர்கள் மத்தியில் ஆக்கத்திறனுக்கு வித்திடும் இவரது இந்த முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கதே.

நான் பெருமைகொள்ளும் என் அன்புக்குரிய இவரது கவியாற்றலும். இலக்கிய தாகமும் தன் வழியில் நின்று தமிழ்மொழியை ஆதரிக்கும் திறனும் மென்மேலும் தொடர வேண்டி என்றும் என் நல்லாசிகளையும் பாராட்டுக்கைதட்டல்களையும் வழங்குவதில் ஆனந்தம் அடை கின்றேன்.

**திருமதி.பி. அன்ரனி**
**பீடத்தலைவர்** (Dean)
**மட்டக்களப்பு தே.க.க - தாளங்குடா.**
**2012.08.08**

## இந்த எழுத்துக்கு உரமூட்டிய பிற கைதட்டல்கள்

இலக்கியத்தின் பல்வேறுபட்ட பரிமாணங்களிலும் பின் நவீனத்துவமும், பெண் நவீனத்துவமும் பிரவகித்துக் கொண்டிருக்கும் சம காலத்தில் சகோதரி சம்சுனாவின் கன்னிக் கவிதைத் தொகுதி எம்முன் கண்சிமிட்டிக் கொண்டிருக்கின்றது.

பெண்கள் சந்திரனைத் தொடுமளவு சாதனை படைத்துக் கொண்டிருக்கும் நவீன உலகில் கவிதையேனும் படைக்கும் பெண்களை நம் பிரதேசத்தில் காண்பது அரிதெனக் காணும் போது இந்நூலா சிரியையான சம்சுனாவின் முயற்சி பாராட்டுக்குரியதே !

சம்சுனாவின் கவிதைகளின் இலக்கிய பெறுமானத்தை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு கவிதை எழுத வேண்டும் என்ற இவரது உணர்வை ஊன்றி நோக்கும் போது எதிர்காலத்தில் இவரை ஒரு நல்ல கவிஞராக வளர்த்தெடுக்கும் வாய்ப்பை எம்மால் எதிர்பார்க்க முடிகிறது.

'மழையில் காய்ந்து
வெயிலில் நனைந்து
முள்ளில் படுத்து
கல்லில் தடக்கி
காதலில் தோற்ற அனுபவங்கள் தன் மொழியில்
தேறிவருகையில் பிறந்த கவியே இவை'

எனக் கூறும் சம்சுனாவின் அனுபவங்களை முற்றிலும் எம்மால் உணர முடியாது போனாலும் இவர் ஒரு மொழியாசிரியர் என்பதனால் மொழித்தேர்ச்சியும், கவியுள்ளமும் கொண்டவராவர் என்பதை மட்டும் மறுக்க முடியாது.

இவரது கவிதைகளில் இலக்கியத்தின் தாகம் தீர்க்கப்படா விட்டாலும் இவரது இலக்கிய தாகம் தீர்ந்திருக்கிறது. சம்சுனாவின் கவிதைகள் இலக்கிய அந்தஸ்த்தை எட்டுவதற்காயுள்ள இடைவெளியை எதிர்காலத்தில் குறைக்கும் என்ற நம்பிக்கை பிறக்கிறது எது எவ்வாறிருப்பினும் சம்சுனாவின் முயற்சி முன்மாதிரிக் குரிய ஒன்று என்பதற்குப் பின்னால் சொல்ல வேறு கருத்தில்லை. இவரது இம்முயற்சியை அகம் நிறைவோடு பாராட்டு கின்றேன். மேலும் மேலும் கவித்து றையில் காலூன்றி வெற்றி பெற வேண்டி இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

**கவிஞர் அக்கரையூர் அப்துல் குத்தூஸ்**

## கமு /ஸாகிறாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் எம்எம் இஸ்மாயிலின் பேனாவிலிருந்து...

செம்மண் தரையாம் சம்மாந்துறையின் சம்சுனா எனும் இளங்கவி தன் உணர்வில் உதித்த முத்துக்களை 'உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில்' நூலுருப்பெறச் செய்திருக்கும் முயற்சி கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைவதோடு, அதற்கென என் வாழ்த்துப் பூத்தூவல்களையும் வழங்குவதில் பேருவகை அடைகிறேன் அல்ஹம்துலில்லா !

செல்வி சம்சுனாவை இற்றைக்கு சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னரே நானறிவேன். கமு. ஸாகிறாக் கல்லூரிக்கு தமிழ் மொழி கற்பிக்க வந்த ஆசிரியர் இவராவார்.மொழியில் பாண்டித்தியமும் முன்னேற்றத்தில் ஆர்வமும், அர்ப்பணிப்பும் கொண்ட இவரது கவித்திறன் எம் கல்லூரி கண்டவையே.

குறித்த ஒரு கருப்பொருளை நினைத்த மாத்திரத்தில் கவிதையில் மட்டுமல்ல இசையுடன் கூடிய பாடல் வரிகளில் கூட எழுதுவது இவருக்கு கைவந்த கலையேதாம். தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனும் பண்பாட்டின் கீழ் அன்பு, அடக்கம், மொழித்திறன் என்பவற்றைப் பிறரிடமும் பகிர்ந்துகொள்ளக் கூடிய இவர் போன்றோர்தான் இலக்கிய உலகிற்கும் உகந்தவர்கள் எனக் கூறுவதில்தான் பெருமைப்படுகின்றேன்.

'உனர்வில் ஊறி மொழியில் தேறிவருவதே
கவிதை எனும் வைர வரியில் விழுந்து
பிறந்த அமுதே எந்தன் கவிதை' என்கிறார்.

உண்மையில் தென்னிந்தியாவின் வைரமுத்தைப் பின்பற்றும் இவர் நம்மண்ணுக்கும் பெருமை சேர்க்கும் இளம் வைரமாக ஜொலிக்க வேண்டுமென்பதே என் அவா.

'அன்புள்ள அன்னைக்கு' முதலிடமும், இரண்டாம் அன்னையாம் தன் கிராமத்துக்கு இரண்டாம் இடமும் கொடுத்து அடுத்தடுத்து தன் உணர்வுகளை படம் பிடித்துக் காட்டும் சம்சுனாவின் கவிதைகள் இலக்கிய அந்தஸ்த்தை எட்டுவதற்காயுள்ள தூரம் மிகத் தொலைவிலில்லை என்றே நான் கருதுகிறேன்.

ஒருதலை ராகம், காதல் தோல்வி, பெண்ணின் பெருமை என்பனவும் ஆங்காங்கே உணர்ச்சிப் பெருக்கோடு எளிமையும் சொட்ட உலாவருவது சிறப்பாகவிருக்கிறது.

'வாசகர்களின் வரதட்சனை
காதலர்களின் கைக்குட்டை'

என புத்தகத்திற்கு பூத்தூவியிருப்பது நயக்கத்தக்கதாயுள்ளது.

'பெண்ணுக்கு பெண்ணாலேயே
போடப்படும் அபராதம்' என சீதனத்தை சீண்டுவோர் பெண்கள்தான் எனக் கூறுவது வித்தியாசமாயிருக்கிறது.

'உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில்' என வரும் தன் தொகுப்பில் காதலின் வலியில் நின்று ஏங்கும் ஒரு உயிரின் கானம் இசையாக வடிகிறது.

மொத்தத்தில் அத்தனை கவிதைகளும் அருமை, இனிமை என்பதைத் தவிர கூற ஏதுமில்லை.

இவர் இலக்கியப் பயணம் தொடர இறைவன் அருள் புரிவானாக!

என்றும் நல் வாழ்த்துப் பூத்தூவல்களுடன்

**எம்.எம் இஸ்மாயில்** (SLEAS)
**ஓய்வு பெற்ற அதிபர்** (zck)
**சாய்ந்தமருது.**
**2012.06.28**

## கமு / ஸாகிறாக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் திருமதி எஸ்.எச்.எம்.எம் காதரின் பேனா விலிருந்து...

கல்லூரியின் வைரவிழா இடம் பெறும் காலத்தே தன் கவிதைகளை வீறுநடை போட வைத்த ஆசிரியை சம்சுனாவின் கவிதைகளுக்கு ஆசி வழங்வதில் மிக்க மகிழ்ச்சியுறுகிறேன்.

'உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில்' கவிதைத் தொகுப்பு காதல் உட்பட பல சமுகச் சித்திரங்களையும் எளிமை வனப்போடு தொட்டு நிற்கின்றதெனலாம்.

எவ்வாறாயினும் கவிதைக்கு மௌன மொழி மட்டுமல்ல எத்தனையோ அர்த்தங்கள் உள்ளதென்பது போகப் போகத்தான் புரியும். இவர் இலக்கியவுலகில் ஒரு புதிய படைப்பாளி என்றாலும் இலக்கிய நயப்பும் ,திறனும் ,கவி புனையும் ஆற்றலும் கொண்டவர் என்பதை, ஒரு மொழியாசிரியர் என்பதைவிடுத்து பலவிடங்களில் நாம் சந்தித்திருப்பதுண்மை.

இவை மென்மேலும் வளர்ந்து ,ஆசுகவியாக அலங்கரித்து, ஆளுமை கொண்ட புதுமைப் பெண்ணாக மிளிர என்றும் என் வாழ்த்துத் தேன்துளிகள்.!

என்றும் நல் வாழ்த்துக்களுடன்

**திருமதி.எஸ்.எச்.எம்.எம்.ஏ.காதர்**

அதிபர் - கல்முனை ஸாஹிறாக் கல்லூரி.

28.07.2012

## என் மண்ணிலிருந்து !

பாடசாலைக் காலம் தொட்டே இசை, கவிதை, பேச்சு, விவாதம், நாடகம் என இலக்கிய வானில் மின்னிக் கொண்டிருக்கும் சம்சுனா உண்மையில் ஒரு சுடர் விடும் சூரியனே!

இவரது கவிதைகளில் சந்தங்கள் திசைமாறிப் பயனித்த போதும் எளிமையும், நவீனமும் குடி கொண்டிருப்பதனால் இவர் வளர்ந்து வரும் நாற்று அல்லது வளர்த்தெடுக்கப் பட வேண்டிய வித்தென்றே கூறக்கிடக்கிறது.

உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில் சம்சுனா தன் பெயருக்கொரு தனத்துவம் கொடுத்திருப்பதையும் கண்டுகொள்ளமுடியாமலில்லை.

உண்மையில் இவர் கூறுவது போல் உணர்வுக்கும், மொழிக்கும் இடையில் உள்ள ஒரு பாலம்தான் கவிதையே தவிர மற்றும்படி அதற்கென இலக்கணம் ஏதும் கிடையாதென்பதுதான் வைரமுத்து போன்றோரின் கருத்துமாகும்.

சமுகத்தின் விம்பமாம் இலக்கியத்தில் காதல் அதன் உயிர் நாடி என்பதற்கிணங்க பல காதல் கவிதைகளை இவர் தந்திருந்தாலும் அன்னை, கிராமம்,பெண்,சீதனம்,பள்ளிக்கூடம்,கண்ணீர் என பல்வேறு நிலைகளையும் எளிமையுடன் யதார்த்தபூர்வமாக சித்தரித்திருப்பது பாராட்டத்தக்கதே.

இலக்கிய ரசனை என்பது தனியாள் ஒருவனின் ஆளுமையைப் பொறுத்ததாகுமென்பதனால் இங்கு விமர்சனம் தேவையற்றதாகிறது எனும் இலக்கியவாதிகள் பலரது கருத்தைத்தான் நானும் நேசிக்கிறேன். எவ்வாறாயினும் கவித்துறையில் மட்டுமன்றி இதர கலைகளிலும் இவரது படைப்புக்கள் மென்மேலும் மிளிர வேண்டி என்றும் நல்லாசி களுடன் என் மண்ணிலிருந்து வாழ்த்தும் நான்

**எஸ். அபூபக்கர்**
அதிபர்
சதுமுஸ்லம் மத்திய மஹா வித்தியாலயம் (தே.பா)
2012.08.08

# நன்றிக்குள் நனைவோர் !

புகழனைத்தும் இறைவனுக்கே !
என் கவிகைக்கு களம் அமைத்த……….

மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி ,
சது.முஸ்லம் மத்திய மஹா வித்தியாலயம் (தே.பா),
கமு.ஷாஹிறாக் கல்லூரி (தே.பா).

கவிதைக்கு அணிந்துரை நல்கிய
Dr.றமீஸ் அப்துல்லாஹ்
(மொழித்துறைத் தலைவர்,தெ.கி.ப)

என் எழுத்துக்கு உரமூட்டி ,ஆசிகளை அள்ளி வழங்கிய

திருமதி: அன்ரனி புஸ்பலதா
(தமிழ் மொழித்துறை சிரேஸ்ட விரிவுரையாளர்,பீடத்தலைவர்
மட்டக்களப்பு தே.க.க )

கவிஞர் அக்கரையூர் அப்துல்குத்தூஸ்

திருமதி.S.H.M.M.A காதர் (அதிபர் KM.ZCK)

ஜனாப்.M.I.இஸ்மாயில் (அதிபர் KM.ZCK)

ஜனாப்.S.அபூபக்கர் (அதிபர் சது.மு.மு.ம.வி – தே.பா)

மன்சூர் எம்.சமீர்(தலைவர்.வாழும் கலை இலக்கிய வட்டம்)

வெளியீட்டின் முழு நடைமுறையிலும் உதவிய

எம்.ஐ.எம் சாக்கீர், எம்.ரீ. முஜாஹிடீன் (தெ.கி.ப.மாணவர்)

பிற வழிகளில் உதவிய : எம்.எம் நிப்றாஸ், ஏ.அஷாட் ,
பி.எம். கியாஸ் அஹமட், பி.பாக்கிர் அலி, எம் ஐ. தாரிக (மாணவர்கள்)

அட்டைப்படமும் கணணி வடிவமைப்பும்: நவாஸ் சௌபி

பதிப்பக உரிமையாளர்களான வாழும் கலை இலக்கிய வட்டம்

பொருளாதார உதவி நல்கிய என் சகோதரர்களான ஏ.ஏ.றஸூல் (அப்துல்லா டிரவல்ஸ் உரிமையாளர்)

ஏ.எம் ஜனா (பொறியியலாளர் MTC Qatar)

என் ஆக்கத்தில் ஈடுபாடுள்ள சகோதரியின் புதல்வி: ஏ.பி.பெனாசிர் ஜஹான் (தெ.கி பல்கலைக்கழக மாணவி)

என்னை நேசிக்கும் என் உடன் பிறப்புக்கள் நண்பர்கள் அனைவருமே

இந் நன்றி மழையில் நனைவோரே !

# உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில் உலாவருவன!

1.அன்புள்ள அன்னைக்கு !
2.என்கிராமம்
3. எழுந்திடு
4.நீ தந்த மாற்றம்
5.சிதறிப் போன வரலாறு
6.காதல் உள்ளவரை...
7.சுகமான சுவாசம் கொடு
8.புனிதமான விருது
9.அந்த நாட்கள்.
10.நீயல்லவோ சுவாசம்
11.உன்னை எனக்குப் பிடிக்கும்
12.நிரந்தரமிலா நினைவுகள்
13.கனவுகள்
14.அரச ஊழியன்
15.தூரிகையே !
16.எப்படி வாழ்வது ?
17.நிழல்களை நம்பிய நிஜங்கள்
18.மனிதம் என்றும் இளமைதான்
19.வியர்வை
20.மௌனம்
21.பயணங்கள்
22.பள்ளிக் கூடம்
23.நீ வந்ததால்தான்
24.முடிவு இரண்டெழுத்தேதான்
25.உன் மேல் கொண்ட காதலுக்காக!
26.கண்ணீர்
27.புன்னகை
28. நீதான்
29.ஏமாற்றம்
30.மரணம்
31.குட்டிக் கவிதைகள்
32.உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில்

## அன்புள்ள அன்னைக்கு!

அம்மா!
பூமி முகத்தில் பூத்த
உன் நேய மகள்
எண்மரில் தளிர்த்த
இளைய நிலா எழுதுவது ,

நலமாயிக்கிறாயா?
வருடத்தில் நாட்களும்
நாட்களின் நகர்வுகளும் உள்ளவரை
உன் நாமம்
நலமாய்த்தான் இருக்குமம்மா!

அன்னையே!
என் கவிதையால்
மரம் தளிருக்கு கூட
மொழி பிறந்தாலும்
ஆச்சரியம்
உன் மடியில்
கிடைத்த மொழியில்
நான் பேசக் கற்றுக் கொண்டதுதான்.

என்னதான் இவர்கள்
வெளியில் எனக்கு
நேசப் பாடம் கற்பித்தாலும்
அது புரிவதாயில்லை
நீ காட்டிய நேசம் மட்டுமே

மனப்பாடமென்பதால்
தாயே!
நீ என்னைச் சுமக்கும் போது
நான் சூரியனல்ல
உனக்கு கிடைத்த ஒன்று
சூரியனாம் சம்சுனாவாய் ஆனதம்மா

இளையவள் நான் என்பதாலா
வாழ்வியல் துயரங்கள்
புகட்ட மறந்தாய்?
தனிமையில் தவிக்கிறேனே!
என் முகம் மறந்ததேனோ!

என் விழிகளை விசாலமாக்கி
எனக்கென்றோர் விலாசத்தை
விஸ்தரித்தவளே!
உன் வார்த்தைகள் ஒவ்வொன்றும்
இங்கு நிழலல்ல நிஜங்கள்தாம் எம்மிடத்தில்

உணர்வுகளை சலவை செய்து
எனக்கு உயிர் பிச்சை ஈந்தவளே!
உன் கனவுக்கதிரையில்தான்
நான் உட்கார்திருக்கிறேன் நலமாக!

என் உயிரில் கலந்தவளே!
வாழ்வியல் பரிணாமத்தில்
எனக்கு எல்லாமே அத்துப்படி
யாவும் நீ
கற்றுக் கொடுத்த முறைப்படிதான்..

அன்பின் தலமாக
சிந்தையில் சுகமாக
என் கவிதையின் வரியாக
காணும் கனவினில் காட்சியாக
இருப்பவள் நீதானே!

உறவுக்கு உயிர் கொடுத்து
இறுதி வரை வாழ்ந்தவளே!
உனக்கு புகழாரம் சூட்ட
என் கவியாரம் காணிக்கையாகாதான்
என்ன செய்வது?
பிரிதலின் பின்தானே
வாழ்வின் வலிகளும்
தெரிகிறது பலருக்கும் என்போல!

நினைவுகளின் நிழலில்
உன் சம்...

## என் கிராமம்

துறை என்று பெயர்பெற்ற
துறையில்லா கிராமமிது
பல்துறையாலே கலைபலவும்
பண்பாடும் அன்னையிது.

வந்தாரை வாழ வைக்கும்
வளமான ஊர் இது
வாஞ்சை ஊளியரை
வரவேற்கும் மண் இது .

இளசுகளின் சிந்தனைக்கு
களம் அமைக்கும் மேடை இது
அறிவுப்பசி உள்ளவரை
ஆதரிக்கும் கூடம் இது.

வயலோட நெல் வாங்கி
வாடியில கல் வாங்கி
பசுவோட பால் குடிச்சி
வாழ்கையோட்டும் கிராமமிது.

கல்வியில கள்ளெடுத்து
அரசியலில் அமுதுண்டு
அறிஞர்களை மேதைகளை
ஆக்கி அழகு பார்த்ததிது.

தேங்காய்ப்பு பிட்டெனவே
இந்து முஸ்லிம் இருவருமே
இன்பத் தமிழ் மொழியினிலே
தென்றல் பாடும் தேசமிது.

மாமரமும் தேமரமும்
வாழை பலா கனிமரமும்
வாசலிலே கோலமிட
பாய்விரித்து நிம்மதியாய்
ஏழை உறங்க வழி சொல்லுமிது.

ஓடியோடி உழைத்தவற்றை
மாடி மனை காரெனவே
வாரி வாரிப் (பெண்)பிள்ளை வாழ
வடித்தளிக்கும் நகரமிது.

வீரமுள்ள தாயெனவே
விரும்பிப் பலர் உறைந்திடவே
காவலனாய் மாறுகின்ற
கருணையள்ள தேசமிது.

செம்மண்தரைதான்
இதன் பிறப்பிடம்
சம்பந்தமில்லாதோரையும்
சமரசம் செய்யும் இடம்.

உழவர்க்கு நந்தவனம்
விருந்தினர்க்கு இது உணவகம்
இனி
விரும்புவோர்க்கெல்லாம்
இதுதான் உறைவிடம்

# எழுந்திடு

மனிதா!
அற்புதமான பகுத்தறிவை
அற்பத்தனமாய் செலவு செய்யும்
உன்
சிந்தை தெளிவது எப்போது?

விண்ணிலே வீடுகட்டுமளவு
விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட காலம்
கண்மூடி இன்னும்
காலத்தை ஓட்டலாமா?

அறிவொளியில் இன்று
அகிலமே சிறப்படைய
நீ மட்டும்
விளக்கொளியை நாடும்
விட்டிலாக இருப்பது ஏன்?

வியர்வை சிந்தாமல் உன்
விதி மாறாது
சோம்பல் உனக்கு
சோறு போடாது
இவையுணர்ந்தும்
இன்னும் உறங்குவதா?
எழுந்திடு மனிதா!
எழுந்திடு!

## நீ தந்த மாற்றம்!

என் இதயம்
உன்னைப் பேச்சுவார்த்தைக்கு
அழைத்த போது
நீ
மௌனத்தைப் பிரதிநிதியாக
அனுப்பியவன் .

என் கவிதைகள்
உன்னிடம்
சரணடைந்த போது
பதில்கள்
தவமிருந்தன வார்த்தைக்கு!

என் காதல்
வயதுக்கு வந்த போது
உன் கால்கள்
வேறோர் வழியில்.

சினேகிதத்திற்காய்
உருவான என் காதல்
இன்று
சம்பிரதாயத்திற்காய்
சத்தியாக்கிரகம் இருக்கின்றது

உன்னைப் பற்றி எழுத ஒரு
வாய்ப்புக் கிட்டாமையால்
காலியாகக் கிடக்கிறது
என் கவிதைப் புத்தகம்

நேற்றைய கனவுகள் நினைவிலில்லை
இன்றைய நினைவினில் திருப்தியில்லை
நாளைய விடியலிலும்
இல்லை நம்பிக்கை
யாவும் நீ தந்த மாற்றம்.

## சிதறிப் போன வரலாறு

நிலவில் தூளி கட்டும்
கனவில்
சிதறிக் கிடக்கிறது
என் இதயம் .
யாரேனும் அதை
ஒன்றுபடுத்தித் தாருங்கள்!

கடந்தவற்றைத் தேடி
வெய்யிலில் நனைந்து
மழையில் காய்கிறேன்
முடிந்தால் மீட்டுத் தாருங்கள்!

நிம்மதிக்குக் கடிதம் போட்டேன்
எவரேனும் ஒரு
பதில் எழுதிப் போடுங்கள்!

வேலியைத் தாண்ட முடியாது
வேதனைக்குள் தவிக்கின்றேன்
என்னை சோதிப்பவர்கள் யார்
கண்டுபிடித்துத் தாருங்கள்!?

நான் தேடும் விடியலில்
எங்கோ விசனம் தெரிகிறது
சற்று விரைந்து வந்து
சரிசெய்து தாருங்கள்.

என் சிதறிப் போன
வரலாற்றைக் கொஞ்சம்
சீரமைத்துத் தாருங்கள்
சிரித்து வாழ ஆசைப்படுகிறேன்
நான்!

## காதல் உள்ளவரை...

பார்வைக்குள் கூடுகட்டி
மனப் போர்வைக்குள்
அடைகாக்கும்
புனிதமான உறவு காதல்.

கண்ணசைவில் பிறந்து
புன்னகையால் வளர்ந்து
கல்லறையும் வென்றுவர
களமிறங்கும் காதல்.

சுருங்கிக் கிடக்கும்
இதயம் இயங்க
அன்பு சுரந்து
அர்ச்சனை போடுகிறது காதல்.

நிலையிலா வாழ்விற்கும்
கனவு வரம்
அளிக்கிறது காதல்.

அமாவாசைக்கும்
பௌர்ணமிக்கும்
ஆயிரமாயிரம் அர்த்தங்கள் கற்பிக்கும்
அந்தரங்க உறவே காதல்.

வாசமற்ற மலர்கட்கும்
நேசச் சுவாசம்
அளிக்கிறது காதல்

இரகசியங்களை
(இ)ரம்மியமாக்கி
பட்டாம் பூச்சிகளை
பறக்கவிடுகிறது காதல்.

திருட்டுக்கும்
திருத்தங்களுக்கும்
தினம் ஒரு
பாடம் நடத்துகிறது காதல்.

காதல் சுகமான சோகம்
சோகமான சுகம்

நினைவுகளின்
அரங்கம் காதல்
நிஜங்களின்
சுரங்கம் காதல்.

தனிமைக்குள்
தம்மை ரசிக்கவும்
நிலவுக்குள்
தம்மை இழக்கவும்
வலையொன்று போடுகிறது காதல்.

சில்லறைக் கனவுகளுள்ளும்
பல இல்லற நினைவுகளை
சிருஷ்டித்துப் பார்க்கும்
உன்னத படைப்பாளி காதல்.

வேர்களைக் கூட
விசாரிக்காமல்

அவன் அவளதும்
அவள் அவனதும்
விலாசம் தேட
விளைகிறது காதல்.

பொறுமையும் மௌனமும்
சோகமும் தனிமையும்
மனிதன் மந்திரமாய்
மாற்றுவிக்கிறது காதல்.

அசடும் வெகுளியும்
அடியோடு தொலைய
அடித்தளமிடுகிறது காதல்..

அர்த்தப்படாத கண்ணீர்துளிகளையும்
பன்னீர்த்துளியாக்கிப்
பார்க்கிறது காதல்.

தொடக்கம் ஒன்றே
அறியாத காதல்
வளர்ச்சிக்கு மட்டும்
அந்த வானம் கூட
அண்மையாகத்தான் அர்த்தப்படுகிறது.

காதல் வந்தாலே
கண்ணாம்பூச்சிதான் வாழ்க்கை.
அழுவதும் சிரிப்பதும்
மாறி மாறி நடக்கின்ற
அற்புதமான வித்தை காதல்.

சவால் எனும்
சத்திர சிகிச்சையால்
சாதலையும் முறியடிக்கிறது காதல்.

மொத்தத்தில்
காதல் நிலையான பேறு
சாகாத வரம்
இது இடமாற்றம் கொண்டாலே
ஏமாற்றம் இதயங்களுக்குத்தான்
ஆக...
காதல் காதலாய் உள்ளவரை
சாதல் சாதலே இல்லை.

## சுகமான சுவாசம் கொடு!

காற்றே!
என் தேகம்
உறங்குவதாயில்லை.
நிம்மதியான அந்தத்தூக்கத்தைக்
கெடுத்தவர் யார்?

உருவமிலா
உன்னைத் தேடியே நான்
உருக்குலைந்துவிட்டேன்.

உன்
சுகமான ஸ்வரங்களை
எனக்காகக் கொஞ்சம்
அனுப்பிவை!

உயிரைக் கையில்
பிடித்துக் கொண்டு
உலவும் எனக்கு
உன் வரவேனும்
சற்று ஆறுதல் தரட்டும்!

பிளவுபட்ட
பூமியானேன்.
என்னைப் பிரித்து வைக்காதே
இன்னும்

ஏமாற்றத்தை மறுமுறையும்
ஏற்கும் சக்தி
எனக்கு இல்லை.
நான் வாழ வேண்டும்.
ஒரு முறையேனும்
சுகமான சுவாசம் கொடு!

## புனிதமான விருது

பெண்ணே!
விழிகளை விசாலமாக்கு
விலாசம் புரியும்.
வார்த்தையை விஸ்த்தரி
யாத்திரை தெரியும்.

பூமிக்காற்றை வாசி
விடுதலை உன்னை சுவாசிக்கும்.

கற்பனைகளை பறக்கவிடு
இப்பூவுலகம் உனக்குள் வரும்.

அச்சமும் நாணமும்
உனக்கு அவசியம்தான்
அது முன்னேற்றத்திலல்ல
உன் அடையாளத்தில்!

பெண்ணே!
பூமியில் குழப்பங்கள் தோன்றினால்
புயலாக மாறு!
சிக்கல்கள் துரத்துகையில்
புதுமைப் பெண்ணாக மாறு!

உன் பாதங்களை
இம் மண்ணில் நிலை நிறுத்து!
கைகளை முடிந்தவரை நீட்டு!
ஐம்பூதங்களிலும்
உன் ஆட்சி அவதரிக்கும்.

பெண்ணே!
நீ புரியாத புதிரல்ல,
மறந்து விடாதே
புனிதமான விருதென்பதை!

## அந்த நாட்கள்

நீ
வருங்கால மயக்கத்தில்
வாழ் நாட்களைத் தொலைக்கின்றாய்.

விருட்சமே இல்லாமல்
சுபீட்சத்தைப் பற்றிப் பேசுகிறாய்.

மேகங்கள்
நிழல் தருவதில்லை.
மரங்கள்
மழை தருவதுமில்லை.

தவறு
உன் உள்ளத்தில்தான்
ஊஞ்சலிட்டுக் கிடக்கிறது.

அந்த
விஷச் சிந்தனைகளை
இப்போதே தூக்கி வீசு.
நீ தேடுவனவெல்லாம்
உனக்குள்தான்
முடங்கிக் கிடக்கிறது.
ஏன் வெய்யிலில் அலைகிறாய்?

பாதைகளில் முட்கள் கிடந்தால்
பாதையை நோவதா?
பயணத்தைத்தான் நிறுத்துவதா?
கொஞ்சம் யோசி!

உண்மைகளை
உறையிட்டு வைக்காதே!
உலகிற்கும்
கொஞ்சம் எடுத்துக் காட்டு!

உன் வெளியழகைக் காட்டும்
கண்ணாடியைப் பார்த்து
கர்வம் கொள்ளாதே!
அதன் பின்னாடிதான்
அழுக்குகள்
உறங்கிக் கிடக்கிறன.

பொய்மைக்கும்
மெய்மைக்குமிடையே
நிலைகுலையும் இவ்வுலகம்
உன்னைத்தான் நம்பிக் கிடக்கிறது
அதற்காகவேனும்
கொஞ்சம் நினைத்துப் பார்!
தொலைந்து போன
அந்த நாட்கள்
எவ்வளவு அழகானதென்று?

## நீயல்லவோ சுவாசம்

அன்பே!
சுகமான வாழ்விற்கு
சுருதி நீயென்பதால்தான்
உன் நாமம்
சுவாசமானதோ!

உன் ராகம்
எம் தேகங்களில்
ரீங்காரமிடுகையில்தான்
எம் உறவுக்கு உயிர்
இருப்பதே புரிகிறது.
நீ இத்துணைப் பெறுமதியானவனா!
எனினும்,
உன்மேல் எனக்கொரு கோபம்.
உயிர்களை வாழவைத்துப் பார்த்த
நீ
வாழும் முறையை மட்டும்
கற்றுக் கொடுக்கத்
தவறி விட்டாயே!
எப்படியோ
தோற்றுப் போன
காதலர்க்கு வேண்டுமானால்
உன் சேவை

தேவையில்லாமல் இருக்கலாம்.
சுதந்திரமாக
வாழ நினைப்பவர்க்கெல்லாம்
நீ அல்லவோ சுவாசம்!

## உன்னை எனக்குப்பிடிக்கும்

இரவே!
உன்னை
எனக்குப் பிடிக்கும் - ஒரு
கவிதைப் புத்தகத்தில்
அதிகம் பிடித்த வரிகளைப் போல்.

சுகமான சிந்தனைக்கு
உன் வரவு ஒரு பூப்பாலம்.

தொலைந்து போனவற்றைத்
தேடும் அவசியம்
உன்னைக் காணும் போது
மறந்து போவதால்
உன்னை
எனக்குப் பிடிக்கும்.

வான நங்கை வெட்கப்படுகின்ற
பாதை பார்த்து - நீ
வலம் வருவதனால்தான்
எம்மவர் உனக்கு
இரவு என
நாமம் இட்டனரோ?

நிம்மதியாய்
ஒரு கனவு காண
நித்தம் ஏங்கிக் கிடப்போர்
மூச்சு விடுவதே
உன்னைக் காண்கையில்தானே!

உன் மயக்கத்தில்
மிஞ்சுவதென்று
எதுவும் இல்லை.
காற்றாடியான எம் வாழ்வில் கூட,
தூக்க மாத்திரை சற்றுக் கொடுத்து
ஆறுதல் தருவதாலும்
உன்னை எனக்குப் பிடிக்கும்.

## நிரந்தரமிலா நினைவுகள்

ஒரு காலத்தில்
உன்னையே சுற்றிச் சுற்றி
வந்தேன் .
விளக்கைத் தேடும் விட்டிலாக...

இன்று
விளக்கை விடுத்து
வெளியில் நிற்கிறேன்
நிரந்தரமில்லாத நினைவுகளோடு.

நீ
சூரியனாய் இருப்பாயென்றே
தாமரையாய் உதித்தவள் நான்
ஒரு நாள்
மின்னலென மறைவாய் எனப் புரியாமல்.

என் இதயத்தை வண்ணாத்தியாக்கியவனே!
இந்தப் பூவுக்கு
தென்றலிடம் நீ அனுப்பிய மடல்தான்
எனக்கு நேசப் பாடம் கற்பித்தது
புயலெனத் தடமாறும் - உன்
வேஷம் மறந்து.

போராட்டத்திலே
வாழ்வு வாதாட்டம்
கண்டது ஒரு காலம்.
ஆரோக்கியமான வாழ்வில்
இன்று
ஓராட்டத்திற்கும்
தயாரற்ற நிலையில்.

விழிகளில் பார்வையாக
மொழிகளில் வார்த்தையாக
உன்னையே
தேக்கி வைத்த காலமது.
பார்க்கவோ பேசவோ
நேரமிலா வேளை இது
மொத்தத்தில்
காலத்தின் சக்தி
மறக்கடிப்பதில் மட்டுமல்ல,
மறந்தவற்றை நினைப்பதிலும்தானென்றே.
இன்றும்
நிரந்தரமில்லா நினைவுகளுடன்
நான்.

## கனவுகள்

உயிர்களை வாழ வைக்கும்
பிரியமான தோழா!

இந்தப் பூவுலகம்
சுழல்கிறது உன்
மத்திய கோட்டில்தானாமே!

வான வில்லைக் கூட
வளைத்துப் பார்க்க
கற்றுக் கொடுத்த நீ
வான் வெள்ளியாகவே
மறைந்துவிடுவதனால்தான்
உன்னில் சிலர்
ஊடல் கொள்கின்றனரோ?

பந்தாக மாறி
உதைக்கும் உன்
அசைவுகளால் நாம்
நொந்தே போகிறோம்
இனி எம்
சிந்தை தெளிய
உன் பயணம்
நனவாகவே இருக்கட்டும்

## அரச ஊழியன்

முகம் மலர்ந்து
சிரிக்கும் நாள்
மாதத்தில் முதல் நாள்தான்
இவனுக்கு.
அதுவும் சில கணங்களுக்குத்தான்.
அடுத்தவன் முகத்தையே
மனனம்
செய்து வைத்திருக்கும்
இவன்,
அன்று எண்ணிப் பார்க்கும்
சம்பள நோட்டுக்களில் கூட
அதிருப்தி கொள்கிறான்
இன்னும்
தன் நிலையில் ஒரு
திருப்தி காணாமையால்

## தூரிகையே!

புலப்படாத சிக்கல்களையும்
வெளிப்படுத்தத் துடிக்கும்
தூரிகையே!
நீயும் காரிகையும்
ஒரு விதத்தில் சம நிலைதான்.
அவளோ,
விழிகளால் அர்த்தப்படும்
வார்த்தை மைக்கு
உன்னைத் துணையாகக்
கேட்கிறாள்.
நீயோ,
விலை மதிக்க முடியாத
நிலைகளையும்
வர்ண ஜாலங்களில்
படைக்கிறாய்.
ஆக..
உன் வாழ் நாட்கள்
ஓவியன் கைகளிலல்ல.
உன்னை அர்த்தப்படுத்தும்
வாழ்வியல் கோலங்களில்தான்.

## எப்படி வாழ்வது ?

வாழ்க்கை,
எப்படி வாழ்வது?
கண்ணில் காண்போரிடமெல்லாம்
கேட்டேன்.
அது பெருங் கதை என்றே
கதையளந்தனர் சிலர்.

சாதனைகளைத் தருவிக்க
வேதனைகளை மறந்து விடு
என்றான் ஒருத்தன்.
வாய்மையைப் பேணு
வாழ்க்கையை நுகர்வாய்
என்றான் இன்னொருத்தன்.

போராட முயற்சிப்பாய் - இனி
சூதாட்டம்தான்
வாழ்வென்றான் மற்றொருத்தன்.
கூடுமானவற்றை விடுத்து
கூடாதன புரிந்தால்
வாழ்வது எளிதென்றான் அடுத்தவன்.
இவர்களின்
முரண்பட்ட பதில்களில்
உடன்பாடு தோன்றாமையால்
என் கேள்வி
தொடர்ந்து கொண்டேயிருக்கிறது
வாழ்க்கை,
எப்படி வாழ்வதென்று?

## நிழல்களை நம்பிய நிஜங்கள்

இருட்டுக்குள்
திருட்டுப் போன
இதயங்கள் இன்று
நிழல்களை நம்பிய நிஜங்களாயின.

கனாக்களுக்குள்
காலங்களை
கழிப்போரும் விழிகளுக்குள்
பார்வைகளை இழப்போரும்
நிழல்களை நம்பிய நிஜங்களேதாம்.
ஏட்டைத் தொலைத்தவனும்,
நட்பைக் குறைத்தவனும்
நாட்டு நடப்புக்களை
அறிய விரும்பாது
தொலைந்து போன நிழல்களை
தேடியே தெருக்களில்..
இப்படியே சில சமயம்
சுய சுவாசத்தை மறந்து
செயற்கை சுவாசத்துக்காய்
மருத்துவ மனைகளில்
போராடும் நோயாளிகளாகவே
தொடர்வோரின் வரலாறும்
நிழல்களை நம்பிய நிஜங்களேதாம்.
இன்று.

## மனிதம் என்றும் இளமைதான்

அன்னையே!
உன் அழகினைத்தான்
மானிடம் பரிசாகக் கேட்கிறது.

இயக்கம் என்னும்
ஐந்தெழுத்திற்கு
ஆகாரம் போட்டவள் நீயல்லவா?

இரத்த ஆறுகள்
பூமியில் ஓடுவதும்
ஓடாமலிருப்பதும் உன்
எழில் ஈன்ற கலைதானே!

உன்னைத் தொட்டுச் செல்லும்
புயல் கூட
சில கணம்
தென்றலாய் மாறுகிறது
உனக்குள் இத்தனை இரகசியங்களா?
ஜனனம்
மரணம் இரண்டிலும்
உன் தரிசனம் சங்கமித்தால்
மனிதம் என்றும் இளமைதான்.

## வியர்வை

துரத்தும் வறுமையையும்
தூரத்துக் கனவாக்கத்
துடிக்கும் உழைப்பாளியின் கண்ணீரே!

நீ உதிர்வதால்
மண்ணும் கயிறாகும்
மரஞ்செடியும் தளிராகும்.

வேதனைகளை உணர
நீ பாலம் போட்டாலும்
பல சாதனைகளும்
உனக்குள்தான்
சரணடையத் துடிக்கின்றன.

கண்ணீரில் தொடரும்
கதைக்குக் கூட
முற்றுப் புள்ளியிட நினைக்கும்
பனித்துளிதான்
உன் பரம வரலாறோ?

## மௌனம்

நீ
வார்த்தை விரதமிருப்போருக்கு
வலிமை கொண்ட ஆயுதம்
உன் பிறப்பால் எங்கும்
சிறப்புக்கள் அதிகம்.

அர்த்தமுள்ள பலவற்றுள்
இதுவரை
அர்த்தப்படாமல் இருப்பது
நீ மட்டும்தான்.

காதலர் உலகில்
பல கண்ணீர்த்துளிகளுக்கு
வர்ண ஜாலம் போட்ட
தூரிகையே!

பேச்சு வராத
ஊமைக்கே சொந்தமான
உன்னை
இன்று
பேசத்தெரிந்தோரும் கைக்கொண்டதனால்தான்
ஊமைக்கும் கூட
தடுமாற்றம் உலகில்.

மனித வாழ்வை
மாயமாக்குவதும்
மயானமாக்குவதும் உன்
கையில் உள்ளதனால்தான்,
உனக்குள் மொழிகளும்
சிக்கிக்கொள்கின்றனவோ?

## பயணங்கள்

யுத்த தேசத்தில்
சப்தமின்றியே வாழ
நினைக்கின்றான் ஒருவன் - தன்
கனவுகளை மட்டும்
கண்களில் தேக்கிக்கொண்டு.

விடியலைத் தேடியே
இவன் பயணம்
தொலைகிறது.
வீதிகளில்

மறுபுறத்தில்...
இலட்சியவாதி ஒருவன்
தான் தொலைத்த
இலக்குகளைத் தேடியே
பயணத்தை முடிக்கிறான்
விரக்தியில்.

அந்த ஒற்றையடிப் பாதையில்
தனியாக ஒரு இளைஞன்
ஆண்டவனைத் தேடி
அலைகிறான்.
இவர்களில் எவருமே
அடுத்தவன் பார்வைக்கு
படாதவர்கள்தான்
தம் வாழ்க்கையையே
பயணமாக்கிக் கொண்டதனால்.

## பள்ளிக் கூடம்

நான்
படிப்புக் கேட்டு
அழுத போது
அன்னை பிடித்துக் கொண்டு
தள்ளிய இடம்
என் பாஷையில்
பள்ளிக் கூடமானது .

தெரிந்தவற்றை
மிகைப்படுத்தி
தெரியாதவற்றை
வளப்படுத்திய என் தோழியே !
உன்னுள்
மரணக் கைதியாகத் துடிக்கும்
பலருள் நான்
ஒரு ஆயுள் கைதியாகவே
இருக்கவிரும்புகிறேன்.
ஏன் தெரியுமா?
என் வாழ்க்கையே
கல்வியாக வேண்டுமெனும் அவாதான்.

நீ
வரம் கொடுப்பதாயிருந்தால்,
எனக்கும்
ஒரு வரம் கொடு
உன்னையே நான் சுவாசமாக்கிக்கொள்ள

என் குருதிகளில்
நனைந்திருக்கின்ற பண்பாடு,
அன்று நீ
எனக்குப் போட்ட பிச்சை.

அதனால்தான்
இன்னும்
நான் ஒரு யாசகனாகவே
இருக்க விரும்புகிறேன்
உன்னில்.

மாணவனாய்
உனக்கு நான்
இருப்பதை விட,
நாற்காலியாகவே
இருக்க விரும்புகிறேன்.
அப்போதாவது உன்னோடு
நிலையாய் இருக்க ஒரு
வாய்ப்புக் கிட்டுமென்று.

## நீ வந்ததால்தான்

கரை தனைச் சீண்டி
களித்து மகிழ்ந்தோம் அன்று .
கடற் கரைக்குக் கூட
எழுத்துக் கூட்ட
பயந்து நிற்கின்றோம்
இன்று,
நீ வந்ததால்தான்.

உன் வரவால்
நாம் கண்ட அழிவுகளை விட
புணரமைப்பின் புதுமைகளதான்
இம்மண்ணில் ஏராளம்
பல NGO களாய்.

நிலங்களை
நிர்வானமாக்கி
ஆங்கெம்
அலங்கார ஆடைகள்
அலங்கோலமானதும்
நீ வந்ததால்தான்

மாடி வீடு போனதுன்னால்
மக்கள் நிம்மதியும்
அழிந்தது உன்னால்.
கோடி கோடியாய் இழந்த போதும்
கிடைத்திடாத செல்வமதை
மனித நேயமாகப் பெற்றோமென்றால்,
அதுவும்.
நீ வந்ததால்தான்.

## முடிவு இரண்டெழுத்தேதான்

பாசம் என்ற சொல்லால்
பகிர்ந்து செல்வது நட்பு.
வேஷம் போடத் தெரியாத
நேஷம் கலந்த நட்பே காதல்.

பார்வைகளில்
வளர்வது நட்பு.
மனப் போர்வைகளில்
பதிவதே காதல்.

காலத்தால்
அழியாதது நட்பு.
ஏதும் காரணத்தால்
சிதைவதே காதல்.

உறவுகளின்
தேடலில் கிடைப்பது நட்பு.
அதை உணர்வுகளில்
கலப்பிப்பது காதல்.

புரிதலில்
பிரிதலிலாதது நட்பு.

பிரிதலில்
புரிதலை உணர்த்துவது காதல்.
வளர் பிறையாம் நட்பில்
தேய் பிறையே காதல்.

மொத்தத்தில்
இவ்விரண்டிற்கும்
முகவரி மூண்றெழுத்தேயாயினும்,
இதன் முகாரிக்கு
முடிவு இரண்டெழுத்தேததான்.

## உன் மேல் கொண்ட காதலுக்காக!

என் கவிதைகளை
வாசித்தாய்
மகிழ்ச்சியுற்றேன்.
என்னைப் பற்றி
யோசிப்பாய் என்று.
நீயோ,
வெறும் வாசகனாகவே இன்னும்.

உன் முகம்
உன் பேச்சு
உன் பார்வை- இவை
எப்பேதும் என் நினைவில்
வருகிறது என்பாய்
அனுதாபத்திற்கே அர்த்தம்
தெரியாத நான்தான்
அதற்கு காதல் நாமம்
சூட்டி விட்டேன்.

தூதனுப்பத் தெரியாத
என்னைப் பார்த்து
என் கவிதைகள்
ஏளனம் செய்தது
அப்போதும் நான் என்
கவிதைகளைத்தான் நம்பியிருந்தேன்
ஒரு நாள்
உன்னை மாற்றும் என்ற கனவில்.

முட்களே இல்லாத என்
பூந்தோட்டத்தில்
சப்பாத்துப் புதர்களே தெரிகிற போதும்
எனக்குக் கோபம்
வருவதாயில்லை . இவையாவும்
என் தவறாய்த் தெரிவதால்.

நான் உன்னையே அதிகம்
ரசித்ததனால்தான்
என் இதயம்
இயற்கையின் பக்கம்
திரும்ப மறுக்கிறது.

எம்மவர் எனக்குக்
கல்யாணச் சிறை விரிக்க
ஆசைப்படுகின்றனர்
ஏற்கனவே உன் நிழலோடு
நான் புரிந்த
நிஜத் திருமணம் புரியாதவர்கள்.

குயில் கூவுகையில்
கூவிப் பார்த்த நான்
இப்போது அதையும்
எதிரியாகவே பார்க்கிறேன் - உன்
நினைவு மறந்து விடுமோ
என்ற பயத்தில்.

நீ தந்த வலி
ஒரு மரண வலிதான்
இருந்தாலும்
மாத்திரையிட்டுக்தெ கொள்கிறேன்
உயிர் மேல் கொண்ட ஆசைக்காகவல்ல
உன் மேல் கொண்ட காதலுக்காக!

## கண்ணீர்!

காயப்பட்ட இதயங்களுக்கு
மருந்தென மாறும்
விருந்து கண்ணீர்.

நிறுத்தி வைத்த நினைவுகளை
மீட்டுப் பார்க்கும்
வீணை கண்ணீர்

விழுந்தவன்
எழாதிருந்த போதும்
பிறந்தவனை
அழவைத்துப் பார்க்கும்
வித்தைதான் கண்ணீர்.

கருவறை முதல்
கல்லறை வரை
வாழ்வியலை
ஒப்பந்தம் செய்கின்ற
அன்பான அழுகை கண்ணீர்.

விழிகள்
பார்வையை இழந்த போதும்

வலிகளுக்கு
தலையணை கண்ணீர்தான்.

கண்ணீர்
வலி கொண்டோனின்
ஆறுதல் மாத்திரை
வலிமையிழந்தோனின்
ஆயுத பூஜை

இந்தக் கண்ணீர் பிறந்தாலே
பிறர் வார்த்தையிலும்
தெளிவிருக்கும்
வாழ்விற்கும் வழிகிட்டும்.

## புன்னகை!

இந்தப் புன்னகை
என்ன விலை?
இளைஞன் கேட்ட கேள்விக்கு
இதயம் சொன்ன பதில்கள் இவை.

தென்றல் கண்டால்
பூவுக்குப் புன்னகை
தேன் சிந்தும்
நறுமணத்தில்
வண்டுக்குப் புன்னகை

மேக மழை தூறலிலே
பூமிக்குப் புன்னகை
நீலக்கடல் அலையினில்தான்
நுரைப்பூவுக்குப் புன்னகை.

ஓடும் நதி நீரினிலே
மீன்களுக்கு புன்னகை
மீனுண்ணும் பறவைக்கெல்லாம்
நதி வரண்டால்தான் புன்னகை.

மலை முகட்டின் கீறலிலே
அருவிகளின் புன்னகை
அருவிகளின் வீழ்கையில்தான்
பயிர்களது புன்னகை.

அழுகின்ற குழந்தைக்கு
அன்னை வந்தால் புன்னகை
அன்பான வாழ்க்கையிலே
ஆனந்தம் புன்னகை.

வான் திரையில் பகலவனால்
விடியலுக்கு புன்னகை
வெந்நிலவின் தூறலிலே
பனித்துளியின் புன்னகை.

ராத்திரையின் நீளத்திலே
தூக்கத்திற்கு புன்னகை
சித்திரையின் உஸ்னத்திலே
பூக்கும் கனிமரத்தின் புன்னகை.

காதலியின் வரவு கண்டு
காதலனுக்கு புன்னகை
கடன்காரன் விலகக்கண்டால்
கடன்பட்டவனுக்கு புன்னகை.

மணவாழ்வில் குதிக்கும்வரை
இளமைக்கு புன்னகை
மழலையொலி கேட்கையிலே
மனதுக்கு புன்னகை.

வன்முறையின் இம்சையிலே
அகிம்சைக்கு புன்னகை
அடுத்தவனின் துயர் களைந்தால்
ஆண்மீகப் புன்னகை.

கண்கள் காணும் காட்சியிலே
கவிஞனுக்கு புன்னகை
ஓய்ந்திடாத வாழ்க்கையிலே
ஒவ்வொன்றும் புன்னகை.

எங்கெங்கும் புன்னகை
எல்லாமும் புன்னகை
இல்லை ஒரு விலையென்பேன்
இந்தப் புன்னகைக்கு விலை கேட்டால்
இனி புன்னகைதான் பதில் என்பேன்.

## நீதான்!

யுத்தத்தின்
சத்தங்கள் நீதான்
என் சித்தத்தை
ஈர்த்தவனும் நீதான்!

சிற்பத்தை
செதுக்கும் உளி நீதான்
என் சிந்தைக்குள்
இருப்பவனும் நீதான்!

தூக்கத்தின்
தாலாட்டு நீதான்
என் துக்கத்தின்
தலையணையும் நீதான்!

பாதையோர
மரம் செடியும் நீதான்
நான் பார்க்கும் இடம்
ஒவ்வொன்றும் நீதான்!

மௌனத்தின்
விடியல்கள் நீதான்
எனைக் கொல்லுகின்ற
உயிர் வலியும் நீதான்!

விழிகளிலே
பார்வை நீதான்
என் மொழிகளுக்கு
பாஷையும் நீதான்!

காகிதத்தில்
கவிதை நீதான்
என் எழுதுகோலின்
இதய மையும் நீதான்!

நந்தவன
காவலனும் நீதான்
நான் சொந்தம் சொல்லி
அழைப்பதுவும் நீதான்!

இருட்டிலொரு
தெருப்பாடகன் நீதான்
நான் ரசிக்கின்ற
மெல்லிசையும் நீதான்!

பயணத்தின்
வழித்துனை நீதான்
என் பாதம் தொடும்
மண்ணெல்லாம் நீதான்!

உச்சி முதல்
பாதம் வரை நீதான்
நான் உச்சரிக்கும்
அத்தனையும் நீதான்!

## ஏமாற்றம்

தோல்விகளின் நிழலில்
தேடிவரும் நிஜம்
தேக்கம் கண்ட நிலையில்
ஏக்கம் கொள்ளச் செய்யும்.

மொழிகளிலே
பிடிக்காத வார்த்தை
பலர் வழிகளிலே
பீடித்த நிலை.

எதிர்பார்ப்பு
விலகும் வரை
ஏமாற்றம் முடிவதில்லை
ஏமாற்றம் கிடைக்கும் வரை
எதிர்பார்ப்பும் தீர்வதில்லை.

பௌர்ணமியை
தேடுவோனுக்கு
அமாவாசை கண்டு ஏமாற்றம்
திருட்டினில் பிழைப்போனுக்கு
திருத்தத்தை
கண்டால் ஏமாற்றம்.

இதயங்களின் இடமாற்றம்
இளைஞனுக்கு ஏமாற்றம்
பரிட்சைகளில் தடுமாற்றம்

படித்தவனுக்கு ஏமாற்றம்
பிள்ளைகளின் பித்தலாட்டம்
பெற்றவர்க்கு ஏமாற்றம்
ஏமாற்றம் வந்தாலே
எல்லாமே போராட்டம்.

இந்த ஏமாற்றம்
பிறந்தாலே
மனிதத்தில் உயிரும்
உள்ளத்தில் உணர்வும்
வாழ்க்கையிலே உறவும்
அடியோடு தொலைந்து விடும்.

மனமாற்றம்
காண்பதற்கும்
மனிதன் ஆட்டம்
குறைவதற்கும்
ஏமாற்றம் முடிவாகும்
ஏமாற்றமே பதிலாகும்.

## மரணம்

நீ
நினைவுகளைத் தொட்டு
கோலமிடுகிற போது
மின்னலென ஓடிவரும்
துன்ப மழை
மரணம்.

உன் விம்பம்
விழுமுன்னே
உன் மூச்சை
வீழ்த்துகிறது மரணம்.

உயிருக்காய்
போராடிய உன் உறவுகள்
இப்போது
உயிலுக்காக மட்டும்
உன்னருகில்.

நிகழ்காலத்தின்
நிதர்சனத்தை
பேசியவர்கள்
இந்த நிமிசம் வரை
உன் கடந்த காலத்தைப் பற்றியே
கதைத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

கட்டிலில்
உன் இருக்கை
உனக்கு தூக்கம் கற்பிக்க
பிறருக்கு
துக்கம் சொல்லிக்கொடுக்கிறது.

இப்போது
ஊனமற்ற ஊனமாய்
நீ
கொள்ளும் உறக்கத்தினால்
மௌனம் மட்டும்தான்
பேச்சுவார்த்தை
நடாத்துகிறது.

இரணத்தின்
தலைவாசல் மூடிக்கொள்ள
மரணத்தின்
வாயில்கள் மட்டுமே
திறந்துகொள்கிறது
உன் வரவுக்காக.

இதுவரை
நீ காணாத ஊர்வலத்தில்
உன்னையும்
பொருந்திக்கொள்ள
மக்கள் கூட்டம்
மண்டியிடுகிறது.

போகும் தருனம் வரை
அலட்சியமாயிருந்தவர்கள்
உன் மரணம் கேட்கையில்தான்
சரணடையத் துடிக்கின்றார்கள்.

ஓ மரணமே!
உனக்கு
மனிதமே கிடையாதா?
அவலம் மட்டுமே
தொடர்கதையுமாகிறது.

## குட்டிக்கவிதைகள் !

### நிலா

கவிஞர்களுக்கு
இது கவி ஆசான்
ஏழைகளுக்கு இலவசப் பொருட்காட்சி
காதலர்களுக்கு களிப்பூட்டி
மொத்தத்தில் சித்தத்தை
ஈர்க்கும் சித்திரம்

### பூமி

ஆகாயத்தில்
அல்லல்படும் காதல் பறவைகள்
சிறகொடிந்து விழுகையில்
தாங்கிப் பிடிக்கும் கம்பளம்

### புத்தகம்

அறிவின் ஆணிவேர்
எழுத்தாளனின் ஈகை
வாசகர்களின் வரதட்சனை
காதலரின் கைக்குட்டை

### சந்திப்பு

இது
காதலர்களுக்கு
இன்பத்தின் உச்சம்
கடன்காரர்களுக்கு
அவஸ்த்தையின் உச்சம்

## குழந்தை

இஷ்டப்பட்டோரின் நினைவுப் பரிசு
கஷ்டப்படுவோனின் ஆறுதல் சின்னம்
இதயமிலா உயிர்களையும்
இரங்கவைக்கும்
இறைவனின்
அற்புதப் படைப்பு

## பிறப்பு

உயிர்களின் உரசலில்
உருக்கொண்ட
வடிவம் இது.
மனிதக் கணக்கில்
அர்த்தமுள்ள சமன்பாடும்
தீர்க்க முடியா முரண்பாடும்
இதுதான்.
இதனால் உலக
நாடுகளின் பட்ஜட்டுக்கள்
நஷ்டப்பட்டாலும்,
தீர்க்கப்படுகின்றன
கஷ்டங்களும்தான்!

## சீதனம்

பெண்ணைத் தொடுவதற்கு
பெண்ணாலேயே போடப்படும்
ஒரு வகை அபராதம்
கன்னியரைச் சிறைப்படுத்தும்
கால் விலங்கு
ஆடவரை ஜடமாக்கும்
அருவருப்பு
இதனால் சீரழிவது பெண் மட்டுமல்ல
ஆணும்தான்
இளமைக்குத் தீனி போட
இதை
இரவலாகக் கேட்கும்
இரக்கமிலா மனிதர்கள் உள்ளவரை
திருமணமென்பது
வார்த்தையில் மட்டும்தான்
வாழ்க்கையிலல்ல
இருசார்க்குமே!

## உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில்

அன்புக்காய் நேற்றுவரை
அலைந்த இவள்
இன்று,
அறியாமை அலையில் சிக்கி
ஆழ்கடலில்.

நீ சூழ்நிலையை
சுவாசமாக்கினாய்
நான் சுதந்திரக் காற்றால்
தூதுவிடுத்தேன்.

கனவுகளின் கால்கோளாம்
உன்னால் - என்
நனவுகளும் நலிகிறது
இந்நாள்.

என்நினைவு ரதத்தின் சாரதியாய்
நேற்றுவரை இருந்தவனே!
உன் வீதி விலகிய ஓட்டம் என்னை
விபத்துக்குள் ஆக்கியது இன்று.

கொதி நீராய் இருந்த உன்னை
குளிர் பனியாய் மாற்ற எண்ணி
முடிவில் ஏமாற்றம்தான் எனக்கு.

நேற்றுவரை
என் விழிகளில் மட்டுமே
எழுதி வைக்கப்பட்ட உன் விலாசம்,
இன்று உன் இடமாற்றத்தால்
இதயத்தில் பதிவானது நிரந்தரமாய்

இரவுகளை சலவை செய்து என்
உணர்வுகளை விலையாக்கியவனே!
காலங்கள் வரைந்த
காதல் ஓவியங்களுள்
நான் ஒரு கல்வெட்டு
அதன் வரவாறு நீதான்

உன் பெயர்
குறிக்கும் எழுத்துக்களில்
ஒரு தாஜ்மஹால்
கொண்டு வந்தேன் அன்று
யாரோ கட்டிய தாஜ்மஹாலில்
நான் தரிக்கின்றேன் இன்று.

கொள்கைளால் சிறைப்பட்ட
உன் திருமண சரத்துக்கள் மட்டும்
கொள்ளை போகாதது
இன்னும் விசித்திரம்தான்

உடன்பாடற்ற
உன் இதயத்தை
திருப்பியனுப்ப
நான்
பட்ட பாடொன்றே போதும்
இன்னுமொரு இதயத்தை

எட்டிப்பார்க்காதிருக்க.
தூக்கத்தைத்
தொலைத்துவிட்ட எனக்கு,
நீ தூரத்தில் நின்று காட்டும்
வெள்ளைக் கொடி கூட
ஆறுதல் தருவதாயில்லை
துக்கமாய் அர்த்தப்படுவதால்.

உன் கனமான இதயம்
என்னைக் காயப்படுத்திவிட்டது.
காதல் பூஜைக்கு
நான் மலர் பறிக்கச் சென்ற போது!
காலடிக்கு வண்டு வரக்
காத்திருந்த மலர்கள்
பொறுமையிழந்து புறப்பட்டதனால்தான்
வண்டுகளுக்கும் இன்று
வக்கிரம் அதிகம் உன்போல

என் மண மேடையில் நீ
குடியிருப்பதனால்தான்
மண மேடைகள் எனக்குத்
தூரமாகிப் போயின.

என்னை
உச்சரிக்க மறந்த உன் உதடுகள்
என் கவிதைகளை உச்சரிப்பதுதான்
புரியாத புதிர் இன்னும்.

உன் தூக்கத்துக்குத்
தலையணை என் கவிதைகள்.
என் துக்கத்துக்கு
இல்லை வரையறை.

என் கவிதைகள்
சுலோகங்களாக
உன் படுக்கையறையை
அலங்கரிக்கின்றனவா?
இருட்டில் ஒளிரும்
மின்மினிகளாக!

என் எழுத்துக்களால்
ஆயிரம் தாஜ்மகால்களை
உருவாக்க முடிந்தாலும்
உன் போல் ஒரு காதலனை
உருவாக்குவது அபூர்வம்தான்!

நான்
காதலை சகாராவில் விதைத்து விட்டு
ஒட்டகையை பழிசுமத்துகிறேன்
நீயே ஒரு சகாரா என்பதனால்.

என்
மெல்லிய இதயத்தை
கவிதைகளாய்க் கோர்த்தனுப்பினேன்.
பதிலுக்கு நீ தருவது - உன்
திருமணப் பத்திரமா?

உன் மௌனத்தை
மொழி பெயர்த்தேன்
அன்னியோன்யமாய் இருந்த என்னை
அந்நியனாய்க் காட்டியது.

ஆக,
உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில்

என் கவிதைகளை
சுவைத்த நீ
என்னையும் ஓர் கவிதையாய்
சுவைத்திருந்தால்
காலம் எனும் பந்தத்தில் இன்று
எமக்குத்தான் முதற்பரிசு!

## இந்த எழுத்தும் பெயரும் பற்றி !

மட்டக்களப்பு தேசிய கல்விக்கல்லூரியில் முதன்மொழிப்பாடத்தைக் கற்று, விஷேட சித்தி பெற்றவர்தான் இந்த இளம் கவிதாயினி ஆதம்பாவா சம்சுனா. தற்போது மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலும் தமிழ் மொழியில் இளங்கலை (பி.ஏ) பட்டத்தையும் முழுத்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவர் இக்கல்லூரியில் கற்ற காலங்களில் நற்சிந்தனை,பேச்சுக்கள், முன்வைப்புக்கள்,விவாதங்கள் என பல இடங்களில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பதித்துக்கொண்டவர். நிமிர்ந்த நடை,நேர்கொண்ட பார்வை,மதப்பற்று,மொழிப்பற்று என எல்லாவற்றிலும் முன்மாதிரியான ஒரு மாணவியாவார்.

திருமதி.அன்ரனி புஸ்பலதா-பீடத்தலைவர்.ம.தே.க.க

செல்வி சம்சுனாவை இற்றைக்கு சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னரே நானறிவேன். கமு/ஸாகிறாக் கல்லூரிக்கு தமிழ் மொழி கற்பிக்க வந்த ஆசிரியர் இவராவார். மொழியில் பாண்டித்தியமும் முன்னேற்றத்தில் ஆர்வமும், அர்ப்பணிப்பும் கொண்ட இவரது கவித்திறன் எம் கல்லூரி கண்டவையே.

குறித்த ஒரு கருப்பொருளை நினைத்த மாத்திரத்தில் கவிதையில் மட்டுமல்ல இசையுடன் கூடிய பாடல் வரிகளில் கூட எழுதுவது இவருக்கு கைவந்த கலையேதாம். தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனும் பண்பாட்டின் கீழ் அன்பு, அடக்கம், மொழித்திறன் என்பவற்றைப் பிறரிடமும் பகிர்ந்துகொள்ளக் கூடிய இவர் போன்றோர்தான் இலக்கிய உலகிற்கும் உகந்தவர்கள் எனக்கூறுவதில் நான் பெருமைப்படுகின்றேன்.

அல்ஹாஜ் எம்.ஐ.எம். இஸ்மாயில். அதிபர் - கமு/ஸாஹிறா கல்லூரி.

பாடசாலைக் காலம் தொட்டே, இசை, கவிதை, பேச்சு, விவாதம் ,நாடகம் என இலக்கிய வானில் மின்னிக் கொண்டிருக்கும் சம்சுனா உண்மையில் ஒரு சுடர் விடும் சூரியனே.

"உன் பெயர் குறிக்கும் எழுத்துக்களில்" என்று சம்சுனா தன் பெயருக்கொரு தனித்துவம் கொடுத்திருப்பதையும் கண்டுகொள்ள முடியாமலில்லை.

சமூகத்தின் விம்பமான இலக்கியத்தில் காதல் அதன் உயிர்நாடி என்பதற்கிணங்க பல காதல் கவிதைகளை இவர் தந்திருந்தாலும் அன்னை, கிராமம்,பெண்,சீதனம்,பள்ளிக்கூடம்,கண்ணீர் என பல்வேறு நிலைகளையும் எளிமையுடன் யதார்த்தபூர்வமாக சித்தரித்திருப்பது பாராட்டத்தக்கதே.

(எஸ்.அபூபக்கர் அதிபர் மு.ம.ம.வி.(தே.பா)

ISBN : 978-955-44015-0-1

9789554401501